விண்ணப்ப எண்

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010**

**கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை, கல்வியியல் கல்லூரி**

2019-2021 இளங்கல்வியியல் (B.Ed.,) முழுநேரப் பட்டப்படிப்பில் சேர்வதற்குரிய விண்ணப்பப் படிவம்

| அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும் | | |
|---|---|---|
| பாடம் | பெற்ற மதிப்பெண்கள் | ஒதுக்கீடு |
| | | |

பாஸ்போர்ட் அளவு ஒளிப்படம் (Pass-port size) அதன் மேல் மாணவர் கையொப்பம் இடவேண்டும்

(விண்ணப்பதாரர் நீலம்/கருப்பு வண்ண பால்பாயிண்ட் பேனாவால் பூர்த்தி செய்யவும்)

முதன்மைப் பாடம்

முதன்மைப் பாட குறியீட்டு எண்

1. விண்ணப்பதாரர் பெயர்

   தமிழில்

   ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)

2. பிறந்த தேதி

3. பாலினம் ஆண் ☐ பெண் ☐

4. தமிழ்நாட்டைச் சார்ந்தவரா? ஆம் ☐ இல்லை ☐

5. நாடு ☐ 6. மதம் ☐

7. இனம்: இதர வகுப்பினர் (OC) ☐ பிற்பட்ட வகுப்பினர் (BC) ☐ மி.பிற்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் (MBC/DNC) ☐

   தாழ்த்தப்பட்டோர் (SC) ☐ அருந்ததியினர் (SC(A)) ☐ பழங்குடியினர் (ST) ☐

8. பிற்பட்ட வகுப்பினர் எனில் முகமதியரா? ☐ ஆம் ☐ இல்லை

9. தமிழ் வழியில் கற்றவரா? ☐ ஆம் ☐ இல்லை

10. பெற்றோர்/பாதுகாவலர்/கணவர் பெயர் ☐ தொழில் ☐

11. விண்ணப்பதாரர் தொடர்பு முகவரி

| |
|---|
| பெயர் |
| |
| மாவட்டம் |
| அஞ்சல் குறியீட்டு எண் |
| தொலை பேசி எண் |

12. கல்வித் தகுதி

அ. 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாதமும் ஆண்டும்

ஆ. மேல்நிலைப் பள்ளி படிப்பு தேர்ச்சி பெற்ற மாதமும்/ஆண்டும்

| இ. பட்டம் | முதன்மைப் பாடம் | பல்கலைக்கழகம் | தேர்ச்சிபெற்ற ஆண்டு | பகுதி III இன் மொத்த மதிப்பெண் (முதன்மை, துணைமை, எழுத்துத்தேர்வு, செய்முறைத்தேர்வு) | |
|---|---|---|---|---|---|
| | | | | பெற்ற மதிப்பெண் | மொத்த மதிப்பெண் |
| பிலிட்/ பி.ஏ/ பி.எஸ்.சி | | | | | |

பகுதி III இல் பெற்ற விழுக்காடு (புள்ளிக்குப் பின் நான்கு எண்கள்)

**குறிப்பு:** **விழுக்காட்டை துல்லியமாகக் கணக்கிட்டு குறிக்கவும். கூடுதலாக விழுக்காடு குறிப்பிடப்பட்டிருப்பின் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.**

13. உயர்கல்வித் தகுதி

எம்.ஏ.,/எம்.எஸ்சி., தேர்ச்சிப்பெற்ற ஆண்டு

எம்.ஃபில்., தேர்ச்சிப்பெற்ற ஆண்டு

பிஎச்.டி., தேர்ச்சிப்பெற்ற ஆண்டு

14. அ. கல்லூரி அளவில் நாட்டு நலப்பணித் திட்டத்தில் (NSS) இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து உறுப்பினராக இருந்து 7 நாட்களுக்குக் குறையாமல் சிறப்பு முகாம் சான்றிதழ் பெற்றவரா? ஆம் இல்லை

ஆ. தேசியப் பாதுகாப்புப் படை மாணவராக இருந்து (NCC) கல்லூரி அளவில் C அல்லது B சான்றிதழ் பெற்றவரா?

ஆம் இல்லை

இ. கல்லூரியில் பயின்றபோது மாநில அளவில் / தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றவரா?

ஆம் இல்லை

ஈ. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நாட்டு நலப் பணித் திட்ட மாணவரா?/ தமிழ்ப் பல்கலைக்கழக கலை/ இலக்கியப் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றவரா?

ஆம் இல்லை

15. முன்னாள் படைவீரரின் மகனா/ மகளா? ஆம் இல்லை

16. மேல்நிலைப் பள்ளியில் பகுதி 1இல் தமிழைப் பயின்றவரா? ஆம் இல்லை

17. மாற்றுத் திறனாளியா?(Differently Abled Person) ஆம் இல்லை

பார்வையற்றவரா? ஆம் இல்லை ஆம் எனில் விழுக்காடு

விண்ணபத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளவை அனைத்தும் சரியானவை என உறுதியளிக்கிறேன். கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் தவறு எனப் பின்னர் தெரிய வந்தால் என் சேர்க்கை நீக்கத்திற்குள்ளாகும் என நன்கு அறிவேன்.

இடம் :

நாள் ; பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் விண்ணப்பதாரர் கையொப்பம்

**பட்ட வகுப்பில் பகுதி III பெற்ற மதிப்பெண்கள் விவரப் பட்டியல்**

**பட்ட வகுப்பில் பயின்ற முதன்மைப் பாடம்:**

**பயின்ற பல்கலைக்கழகம்:** **பதிவு எண்:**

**தேர்ச்சிப் பெற்ற மாதம்:** **ஆண்டு:**

**இளநிலைப் பட்டப் படிப்பில் முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளின் முதன்மை, துணைமைப் பாடங்கள் எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள்**

| பகுதி III | | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | பாடக்குறியீடு | பெற்ற மதிப்பெண்கள் (பெ.ம) | உயர்ந்தபட்ச மதிப்பெண்கள் (உ.ப.ம) | குறிப்பு |
| | | | | |
| | கூடுதல் | | | |

**பகுதி III இல் விழுக்காடு = (பெ.ம)** ____________ x100= | | | | | | | |

**(நான்கு தசம திருத்தமாக)**

**விண்ணப்பதாரர் கையொப்பம்** **பயின்ற துறையின் ஆசிரியர் சான்றொப்பம்**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010**

**வாகை வளாகம், திருச்சி சாலை, தஞ்சாவூர்-613 010**

(தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் B+ தரம் பெற்றது)


# இரண்டாண்டு இளங்கல்வியியல் (B.Ed.,) பட்டப்படிப்பு (முழுநேரம்) சேர்க்கை

**விண்ணப்ப படிவம் மற்றும் சேர்க்கைக் கையேடு - 2019-2021**

Application form and Prospectus - **2019-2021**

Two years B.Ed degree course (Full Time) Offered in Tamil University

விலை ரூ.600/- மட்டும்


தொ.பே: 04362-227782. 226720

***www.tamiluniversity.ac.in***

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் -613 010**

**கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை**

**இளங்கல்வியியல்** (B.Ed.,) **(முழுநேரம்) பட்டப்படிப்பு**

**சேர்க்கைக் கையேடு** (PROSPECTUS)

**தமிழ்ப் பல்கலைக்கழக வரலாறு**

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஓர் உயர்நிலை ஆய்வு மையமாக 1981ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் தொடங்கப்பெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ தொலைவில் பரந்துவிரிந்த ஏறத்தாழ 900 ஏக்கர் நிலப்பரப்பில் எழில்மிகு இயற்கைச் சூழலில் அமைந்துள்ள ஓர் உயர்கல்வி நிறுவனமாகும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஐந்து புலங்களின் கீழ் இருபத்து ஐந்து துறைகள் செயல்படுகின்றன.

இப் பல்கலைக்கழகத்தில் அனைத்துத் துறைகளிலும் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டப்படிப்புகள் உள்ளன. பல்துறை ஆய்வும் ஊக்குவிக்கப்படுகிறது.

இப்பல்கலைக்கழகத்தில் இந்திய நாடாளுமன்ற வடிவமைப்பில் உயர்நிலை ஆய்வுக்கு உறுதுணையாக ஒரு நூலகம் அமைந்துள்ளது. இதில் 1,75,000 நூல்களும் 375 பருவ இதழ்களும் மாணவர்களின் பயன்பாட்டிற்கு இடம்பெற்றுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகத் துறைகள் அனைத்தும் கணிப்பொறி வசதியைப் பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் தம்முடைய துறைகளில் சிறப்பான பட்டங்களையும், பயிற்சிகளையும் ஆய்வு அனுபவங்களையும் பெற்றுள்ளதுடன் அரிய பல ஆய்வு நூல்களையும் எழுதி அளித்துள்ளனர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு மாணவர்களின் பயன்பாட்டிற்காகவும் பயிற்சிக்காகவும் கணிப்பொறி அறிவியல் துறை செயல்படுகிறது. இத்துறையில் மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் இணையதள இணைப்பும் உள்ளது. முதுநிலை மாணவர்கள் நாட்டு நலப்பணித் திட்டத்தில் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பும், பல்கலைக்கழக அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பும் உள்ளது.

2006-2007 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டாகக் கொண்டாடப்பட்டுப் பல்வேறு செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வினையொட்டி இரண்டு புதிய துறைகள் தொடங்கப்பட்டன. மேலும் 2006-2007 கல்வியாண்டு முதல் தெரிவு அடிப்படை மதிப்பெண் முறை (CBCS) செயல்படுத்தப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கென வேலைவாய்ப்பு வழிகாட்டும் மையம், மாணவர்கள் குறைதீர்க்கும் அமைப்பு, ஆகியன மாணவர்கள் நலன் கருதிச் செயல்பட்டு வருகின்றன. மாணவ, மாணவியர்களுக்குத் தனித்தனியாக விடுதி வசதி உள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குத் தேசிய தரமதிப்பீட்டுக் குழுமம் இரண்டாவது சுற்றில் (NAAC) $B^{+}$ தரம் வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பல்கலைக்கழக நல்கைக் குழு பல்வேறு திட்டங்களும் கல்வி உதவித் தொகைகளும் UGC, ICSSR, ICHR, ICPR போன்ற இந்திய ஆய்வுக்கழகங்கள் மூலம் பல்வேறு திட்டங்களுக்கு கூடுதல் நிதியுதவியும் கிடைக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

I. **தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் ஐந்து புலங்களும் இருபத்து ஐந்து துறைகளும் உள்ளன அவைகள்.**

(1) **கலைப்புலம்**

1. சிற்பத்துறை
2. இசைத்துறை
3. நாடகத்துறை

(2) **சுவடிப்புலம்**

1. ஓலைச்சுவடித் துறை
2. அரிய கையெழுத்துச் சுவடித்துறை
3. கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை
4. நீரகழாய்வு மையம்

(3) **வளர்தமிழ்ப் புலம்**

1. அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறை
2. மொழிபெயர்ப்புத் துறை
3. அகராதியியல் துறை
4. சமூக அறிவியல் துறை
5. அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை
6. கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை

(4) **மொழிப்புலம்**

1. இலக்கியத்துறை
2. மொழியியல் துறை
3. தத்துவ மையம் (மெய்யியல் துறை)
4. பழங்குடி மக்கள் ஆய்வு மையம்
5. நாட்டுப்புறவியல் துறை
6. இந்தியமொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி

(5) **அறிவியல் புலம்**

1. கட்டடக்கலைத்துறை
2. தொல் அறிவியல் துறை
3. தொழில் மற்றும் நில அறிவியல் துறை
4. சித்த மருத்துவத்துறை
5. கணிப்பொறி அறிவியல் துறை
6. சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை

II **கல்வியியல் துறை (Department of Education)**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை 2007-2008ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது.

III **கல்வியியல் துறையில் கீழ்வரும் படிப்புகள் உள்ளன**

1. முனைவர் பட்டம் (கல்வியியல்) – முழுநேரம்/பகுதி நேரம்
2. ஆய்வியல் நிறைஞர் பட்டம் (கல்வியியல்) – முழுநேரம்

3. கல்வியியல் நிறைஞர் பட்டடம் (கல்வியியல்) - முழுநேரம்
4. இளங்கல்வியியல் பட்டடம் (கல்வியியல் கல்லூரி) - முழுநேரம்

## IV **கல்வியியல் துறை**

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறையில் கல்வியியல் கல்லூரி 2007-2008 கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. இது தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் அறிந்தேற்புப்பெற்றது. இதில் இளங்கல்வியியல் மற்றும் கல்வியியல் நிறைஞர் இரண்டாண்டு முழுநேரப் பட்டப்படிப்பு இருபாலருக்கும் வழங்கப்படுகிறது. உயர் கல்வித் தகுதிகள் கொண்ட பேராசிரியர்களால் வகுப்புகள் சிறப்பான முறையில் நடத்தப்படுகின்றன. நன்கு வசதி படைத்த ஆய்வகங்கள் மற்றும் நூலகம் உள்ளன. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களது அனுமதியோடு மாவட்டங்களில் உள்ள உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் சிறப்பான முறையில் கற்பித்தல் பயிற்சி அளிக்கப்படுகிறது. உடற்கல்வி, சமூகப்பணி, களப்பணி போன்ற பாட இணைச்செயல்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் வேலை வாய்ப்பு வழிகாட்டி மையத்தின் மூலம் வளாக நேர்காணலில் (Campus Interview) இளங்கல்வியியல் பயிற்சி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு பல்வேறு பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஏனைய பயிற்சி ஆசிரியர்கள் உயர்கல்வியைத் தொடர்கின்றனர்.

## V. **இளங்கல்வியியல் 2019-2021 ஆம் கல்வியாண்டு சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவம்**

2019-2021ஆம் கல்வியாண்டில், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரியில் பி.எட்., பட்டப்படிப்பிற்கு (முழுநேரம்) இருபாலர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படு சேர்கைக்கான விண்ணப்பப் படிவங்கள், விவரக்கையேடு - காலை 10.00 மணி முதல் மாலை 5.00மணி வரை எல்லா வேலை நாட்களிலும் தமிழ்ப் பல்கலைக்கழகச் சேர்க்கைப் பிரிவில் வழங்கப்படும். விண்ணப்பத்தினை நேரில் பெற விரும்புவோர் ரூ.600/-ஐ பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தாழ்த்தப்பட்ட/பழங்குடி வகுப்பினருக்கு ரூ.300/- (சாதிச் சான்றிதழின் சான்றொப்பமிட்ட நகல் அளிக்க வேண்டும்).

விணணப்பத்தினை அஞ்சலில் பெற விரும்புவோர் ***The Registrar, Tamil University, Thanjavur - 613 010***. என்ற பெயரில் தஞ்சாவூரில் மாற்றத்தக்க வகையில் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளில் பெறப்பட்ட கேட்புக் காசோலையாக ***(Demand Draft Payable at Thanjavur)*** செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பத்தினை அஞ்சலில் பெற விரும்புவோர் மேற்கண்டக் கட்டணத்துடன் தன் முகவரியிட்ட ரூ.25/-க்கு அஞ்சல் வில்லை ஒட்டிய A4 அளவுள்ள உறையைச் சேர்த்து அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பத்தினை ***www.tamiluniversity.ac.in*** என்ற இணையதளத்தில் (***Online Apply***) பதிவிறக்கம் செய்து விண்ணப்பத்தொகைக்கான வரையோலையை இணைத்து பூர்த்திசெய்து நேரில் சேர்க்கைப்பெறலாம்.

விண்ணப்பப் படிவத்தை நிறைவு செய்யும் முன்பு விவரக் கையேட்டை (Prospectus) தெளிவாகப் படிக்கவும்.

## VI. **பி.எட். பட்டப் படிப்பில் சேருவதற்குரிய பாடங்கள்**

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரில் கீழ்க்காணும் பாடப் பிரிவுகளில் சேர்க்கை நடைபெறும்.

| முதன்மைப் பாடக் குறியீட்டு எண் | பாடம் |
|---|---|
| 01 | தமிழ் |
| 02 | ஆங்கிலம் |
| 03 | கணிதம் |
| 04 | பொருளறிவியல் (இயற்பியல் &வேதியியல்) |
| 05 | உயிரறிவியல் (விலங்கியல் மற்றும் தாவரவியல்) |
| 06 | வரலாறு |
| 07 | புவியியல் |

மேலும், கீழ்க்காணும் இளநிலைப் பட்டம் பெற்ற மாணவர்களும் அதற்கெதிரே குறிப்பிட்டுள்ள இளங்கல்வியியல் (B.Ed.,) விருப்பப் பாடத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

1. பயன்பாட்டுக் கணிதம் (Applied Mathematics) – கணிதம் (Mathematics)
2. பயன்பாட்டு இயற்பியல் (Applied Physics)
   புவி இயற்பியல் (Geo Physics)
   உயிர் இயற்பியல் (Bio-Physics)
   மின்னணுவியல் (Electronics)
   உயிர் வேதியியல் (Bio Chemistry)
   பயன்பாட்டு வேதியில் (Applied Chemistry)
   – பொருளறிவியல் (Physical Science)
3. நுண்ணுயிரியல் (Micro-Biology)
   தாவர உயிரியல் (Plant Biology)
   சுற்றுச்சூழல் அறிவியல் (Environmental Science)
   உயிர்நுட்பவியல் (Bio-Tecnology)
   – உயிரறிவியல் (Biological Science)
4. பயன்பாட்டுப் புவியியல் (Applied Geography) – புவியியல் (Geography)
5. இந்தியப் பண்பாடு (Indian culture) – வரலாறு (History)

VI (a) **சேர்க்கைக்கான கல்வித் தகுதிகள்**

இளங்கல்வியியல் சேர்க்கைக்கான தமிழக அரசின் விதிமுறைகளின் படி சேர்க்கை நடைபெறும்.

மேற்கண்ட பாடங்களுள் ஒன்றைத் தேர்வு செய்யும் விண்ணப்பதாரர் அப்பாடத்தினை இளநிலைப்பட்டப் படிப்பில் (UG Degree) முதன்மைப் பாடமாகக் (Major Subject) கொண்டு படித்திருத்தல் வேண்டும். 10+2+3 என்ற கல்வி முறையில் பயின்றவர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். இளநிலை பட்டப்படிப்பில் இரண்டு அல்லது மூன்று முதன்மைப் பாடங்களைப் (Double or Triple Major) பயின்றிருந்தால் அவற்றுள் ஏதேனும் ஒரு முதன்மைப் பாடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இளநிலைப் பட்டதாரிகள், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்கப்படும் இரண்டாண்டு பி.எட். படிப்பிற்கான கால அளவு இரண்டு முழுமையான கல்வியாண்டுகளாகும்.

| வகுப்பு | மதிப்பெண் விழுக்காடு |
|---|---|
| பொதுப் பிரிவினர் (O.C) | 50% |
| பிற்பட்ட வகுப்பினர் (B.C) | 45% |
| மிகவும் பிற்பட்ட வகுப்பினர் (ம) சீர் மரபினர் (MBC/DNC) | 43% |
| பட்டியல் வகுப்பினர்/ மற்றவர் SC (O) பட்டியல் அருந்ததியினர் (SC(A) மற்றும் பட்டியல் பழங்குடி வகுப்பு (ST) | 40% |

மாற்று திறனுடையோர் (Differently Abled Persons) மற்றும் பார்வையற்றோர் இளநிலைப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருந்தாலே விண்ணப்பிக்கலாம்.

**படிப்புக் காலம்**

ஒரு கல்வியாண்டிற்கு 200 வேலைநாட்கள் (சேர்க்கைக்குரிய நாட்களும் தேர்விற்குரிய நாட்களையும் தவிர்த்து)

**பயிற்று மொழி : தமிழ்**

**இடஒதுக்கீடு**

தமிழக அரசால் தீர்மானிக்கப்பட்டுள்ள வகுப்புவாரியான இட ஒதுக்கீடு அடிப்படையில் கீழ்க்காணும் விழுக்காட்டில் சேர்க்கை நடைபெறும்.

| | |
|---|---|
| பொதுப் பிரிவினர் (OC) | 31% |
| பிற்பட்ட வகுப்பினர் (BC)/இஸ்லாமியர் (BCM) | 30% (26.5+3.5) |
| மிகவும் பிற்பட்ட வகுப்பினர் (ம) மற்றும் சீர் மரபினர் (MBC/DNC) | 20% |
| பட்டியல் வகுப்பினர்/ மற்றவர் SC(O) பட்டியல் அருந்ததியினர் (SC(A)) மற்றும் | 18% (15+3) |
| பட்டியல் பழங்குடி வகுப்பு (ST) | 1% |

தமிழ்நாட்டுக் குடிமக்கட்கு மட்டுமே இந்த இன ஒதுக்கீடு பொருந்தும்.

**சிறப்பு இட ஒதுக்கீடு**

| வ,எண் | பிரிவு | இடஒதுக்கீடு விழுக்காடு |
|---|---|---|
| 1. | முன்னாள் இராணுவ வீரர்களின் குழந்தைகள் | 1% |
| 2. | **மாற்றுத் திறனாளிகள்** | **3%** |
| | அங்கங்கோணல் ஊனமுற்ற மாற்றுத்திறனாளிகள் (OH) 1% | |
| | செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளிகள் (HI) 1% | |
| | கண்பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் (VI) 1% | |

**விண்ணப்பத்தை நிறைவு செய்வதற்கான வழிமுறைகள்**

விண்ணப்பத்தாரர் தமது மதிப்பெண் விழுக்காட்டினைத் தெளிவாக, துல்லியமாகக் கணக்கிடப்பட வேண்டும். பல்கலைக்கழக மதிப்பெண் பட்டியலில் உள்ள பகுதி மூன்றின் (Part-III) மதிபெண்களை அப்படியே கூட்டி பின்பு கூடுதல் மதிப்பெண்ணிற்கு விழுக்காடு கணக்கிடப்பட வேண்டும்.

இளநிலைப் பட்டப் படிப்பில் முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் முதன்மை, துணைமைப் பாடங்களின் எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண் விழுக்காட்டை மட்டுமே சேர்க்கைக்கான அடிப்படை மதிப்பெண்ணாக ஏற்றுக்கொள்ளப்படும். (பகுதி I, பகுதி II, மதிப்பெண் விழுக்காடு சேர்க்கைக்கு ஏற்கப்படமாட்டாது) இளநிலைப் பட்டப் படிப்பில் பகுதி மூன்றில் பெற்ற மதிப்பெண் விழுக்காட்டினை விண்ணப்பத்தில் குறிக்க வேண்டிய இடத்தில் நான்கு இலக்கப் பின்னங்களில் தெளிவாக எழுத வேண்டும். (எ.கா: 75.1617) நிறைவு செய்ப்பட்ட விண்ணப்பப் படிவம் குறிப்பிட்ட தேதிக்குள் அளிக்கப்படாவிட்டாலும், வரையறுக்கப்பட்ட வடிவத்தில் இல்லையென்றாலும், முழுமையாக நிறைவு செய்யப்படாமல் இருந்தாலும், தவறான தகவல்கள் மற்றும் தவறான மதிப்பெண்கள் குறிக்கப்பட்டிருந்தாலும், சான்றொப்பம் (Attested) இடப்பட்ட இனச் சான்றிதழின் நகல் இணைக்கப்படாவிட்டாலும், அறிவுறுத்திய வகையில் முழுமையாகப் நிறைவு செய்யப்படாமல் குறையுடையதாக உள்ளது எனக் கருதப்பட்டாலும் எவ்வித அறிவிப்புமின்றி விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**தர வரிசைக்கான முறைகள்**

இளநிலைப் பட்டப் படிப்பில் மூன்று ஆண்டுகளிலும் பெற்ற முதன்மை மற்றும் துணைமைப் பாடங்களின் எழுத்து மற்றும் செயல்முறைத் தேர்வு மதிப்பெண்கள் மட்டுமே (பகுதி 3) தரவரிசைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இரண்டு அல்லது மூன்று முதன்மைப் பாடங்களை இளநிலைப் பட்டப் படிப்பில் பயின்றிருப்பின் விண்ணப்பத்தாரர் விண்ணப்பத்தில் தெரிவு செய்யும் முதன்மைப் பாடத்தின் மதிப்பெண்கள் சராசரி மட்டுமே தரவிசைக்கு உட்படுத்தப்படும். இரண்டு அல்லது மூன்று முதன்மைப் பாடங்களை இளநிலைப் பட்டப் படிப்பில் பயின்றிருப்பின் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் தெரிவு செய்யும் முதன்மைப் பாடத்தின் மதிப்பெண்கள் சராசரி மட்டுமே தரவரிசைக்கு உட்படுத்தப்படும். ஐந்தாண்டுகள் ஒருங்கிணைந்த (Integrated - PG Course) முதுநிலைப் பட்டப்படிப்பாக இருந்தால், முதல் மூன்று ஆண்டுகட்கு உரிய பகுதி மூன்றின் மதிப்பெண்கள் மட்டும் தரவரிசைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

VI (b). **உயர்கல்வித் தகுதிக்கு உரிய கூடுதல் மதிப்பெண்கள் கீழ்க்காணுமாறு அளிக்கப்படும்**

| | | |
|---|---|---|
| முதுநிலைப் பட்டம் (P.G) | – | 4 மதிப்பெண்கள் |
| ஆய்வியல் நிறைஞர் பட்டம் (M.Phil.,) | – | 5 மதிப்பெண்கள்(4+1) |
| முனைவர் பட்டம் (Ph.D.,) | – | 6 மதிப்பெண்கள்(4+1+1) |

- ஒருவருக்கு உயர்கல்வித் தகுதிக்குரிய கூடுதல் மதிப்பெண்ணாக அதிக அளவு ஆறு மதிப்பெண்கள் மட்டுமே அளிக்கப்படும்.
- இளநிலைப் பட்டப் படிப்பில் முதன்மைப் பாடமாகக்கொண்டு பயின்ற, அதே பாடத்தில் உயர்கல்வித் தகுதி பெற்றிருந்தால் மட்டுமே மேற்கண்டவாறு கூடுதல் மதிப்பெண் வழங்கப்படும்.
- கீழ்க்காணும் பாட இணைச் செயல்களில் (Co-Curricular Activities) ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் கூடுதலாக மூன்று மதிப்பெண்கள் வழங்கப்படும்.

அ. கல்லூரி அளவில் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நாட்டு நலப்பணித் திட்ட (NSS) உறுப்பினராக இருந்ததுடன் 7 நாட்கள் சிறப்பு முகாமில் கலந்துகொண்டமைக்கானச் சான்று.

ஆ. என்.சி.சி (NCC) கல்லூரி அளவில் பி அல்லது சி சான்று (B or C Grade).

இ. கல்லூரியில் பயின்றபோது மாநில அல்லது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றமைக்கான சான்று.

ஈ. தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட (NSS) உறுப்பினராக இருந்தமைக்கான சான்றிதழ்/ தமிழ்ப் பல்கலைக்கழகப் கலை இலக்கிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றமைக்கான சான்றிதழ்.

**கலந்தாய்விற்கு அழைத்தல்**

விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், தர வரிசை, தமிழ்நாடு அரசின் இன ஒதுக்கீட்டு அடிப்படையில் கலந்தாய்விற்குத் தற்காலிகமாக விண்ணபத்தாரர்கள் அழைக்கப்படுவார்கள். கலந்தாய்வின் முடிவில் விண்ணபதாரரின் தெரிவு மற்றும் சேர்க்கை உறுதி செய்யப்படும்.

கலந்தாய்விற்குக் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குள் வராதவர்களின் தெரிவு ஏற்கப்பட மாட்டாது. கலந்தாய்வின் போது சான்றிதழ் சரிபார்த்தலுக்கும், அதன் பிறகு சேர்க்கையின்போதும் சான்றிதழ்களை வழங்க வேண்டும். கலந்தாய்விற்கு வரும் விண்ணபதாரர்கள், நிரந்தர இனச்சான்றிதழ் அட்டையுடன் (Permanent Community Card) வரவேண்டும். பழங்குடி இனத்தவராயின் (ST) தங்கள் சொந்த ஊரின் வருவாய்க்கோட்ட (RDO) அல்லது மாவட்ட ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட இனச் சான்றிதழைக் கண்டிப்பாகக் கொண்டு வரவேண்டும்.

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை சமர்பிக்கும் முறை**

அ. பத்தாம் வகுப்பு மற்றும், பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்

ஆ. பட்ட வகுப்பு மதிப்பெண் பட்டியல் மற்றும் பட்டச் சான்றிதழ்

இ. முதுகலை (M.A.,) / முது அறிவியல் (M.Sc.,) / ஆய்வியல் நிறைஞர் (M.Phil.,) முனைவர் பட்ட (Ph.D.,) சானிறதழ் மற்றும் பட்டச் சான்றிதழ்.

ஈ. இனச் சான்றிதழ்

உ. என்.சி.சி (சி/பி) / என்.எஸ்.எஸ் 7 நாள் சிறப்பு முகாம் சான்றிதழ், தேசிய/ மாநில அளவிலான விளையாட்டுச் சான்றிதழ்.

ஊ. முன்னாள் இராணுவத்தினர் மகன் அல்லது மகள் என்பதற்கான சான்றிதழ்/ மாற்றுத் திறனுடையோர் (Differently Abled Persons) சான்றிதழ்.

மேற்கண்ட அனைத்துச் சான்றிதழ்களின் நகல்களையும் இணைக்க வேண்டும்.

- விண்ணப்ப விற்பணை நாள் ***03.06.2019*** முதல்
- விண்ணப்ப விற்பனை கடைசி நாள் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் நாள் ***03.07.2019 பிற்பகல் 5.00 மணி வரை.***

## நேரடிச்சேர்க்கை 03.06.2019 முதல் நடைபெற்றுவருகிறது

**நிறைவு செய்த விண்ணப்பத்தினை அனுப்ப வேண்டிய முகவரி**

**பதிவாளர்**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர் - 613 010**